★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 85630

நம் நாடு

தி. மு. கழக தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: புரட்டாசி 30உ. திங்கள் (15—10—56) ★ ★ வெளியூர் : புரட்டாசி 31உ. செவ்வாய் (16—10—56) [இதழ் 108

கோவையில் கைதிகளுக்கு மாதிரிப் பண்ணை

கோவை, அக். 18—

சிறைச் சீர்திருத்தத் திட்டங்களின்படி, கோவை மத்திய சிறைக் கைதிகளுக்காகப் பத்து ஏக்கர் பரப்பில் மாதிரிப் பண்ணை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்றும், இந்தப் பண்ணை வேகமான முன்னேற்றம் பெற்றுவருவதாகவும் கூறப்படுகிறது.

கோவையை அடுத்துள்ள சிங்காநல்லூரில் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பண்ணையில் சுமார் 10 கைதிகள் வேலை செய்கின்றனர் என்றும், இங்கு சோளம் விளைவிக்கப்பட்டிருக்கிறது என்றும் இந்தச் சோளம் கைதிகளுக்கு உணவாகும் என்றும் கூறப்படுகிறது.

இந்தத் திட்டம் வெற்றிபெறுமானால், மேலும் பல ஏக்கர் நிலம் இப்படிப் பயிரிடப்படுமென்று தெரியவருகிறது.

'இந்துமத சாதித் திமிர் ஒடுங்கவில்லை'

'சாதி இந்துக்கள் மனப்போக்கு மாறவே இல்லை'

மதமாற்றக் காரணத்தை விளக்குகிறார் டாக்டர் அம்பேத்கார்

இரண்டு இலட்சத்திற்கு அதிகமானோர் இந்துமதத்திற்கு தலைமுழுக்கிட்டனர்

புத்த மதத்தைத் தழுவினர்

நாகபுரியில் உலகு காணாத விழா

இந்து மதத்தினரின் திமிர்க் கொடுங்கோன்மை ஒழியவில்லை என்பதினாலேயே தானும், தனது எண்ணற்ற ஊழியர்களும் புத்த மதத்தைத் தழுவியதாக டாக்டர் அம்பேத்கார் கூறியிருக்கிறார்.

'சாதி இந்துக்களின் தீய ஒழுக்கத்தின் விளைவாக—திமிரின் விளைவாக வேறு வழியின்றி நாங்கள் புத்த மதத்தைத் தழுவினோம்; சாதி இந்துக்கள் மனமாற்றம் அடைவதற்காக நாங்கள் போதிய அவகாசம் தந்தோம்; ஆனால் அவர்கள் போக்கு மாறவே இல்லை'

—என்று, மிக மன வேதனையோடு டாக்டர் அம்பேத்கார் கூறியிருக்கிறார்.

உலகு காணா விழா

இதுவரை உலகம் கண்டிராத வகையில் இந்த மதமாற்ற விழா வெகு விமரிசையாகப் பெரும் அளவில் நடைபெற்றிருக்கிறது.

விழாவினை ஒட்டி, நாகபுரி நகரில் பல பகுதி மக்களும் இலட்சக் கணக்கில் திரண்டிருக்கின்றனர்.

டாக்டர் அம்பேத்காரும் அவரது மனைவியாரும் முதல் முதலில் புத்த மதத்தைத் தழுவிக்கொண்டனர்.

பர்மாவிலிருந்து வந்திருந்த புத்த பிட்சுவான சந்திரமாணி என்பார் மந்திரம் செபித்து இந்தமத மாற்ற விழாவினை நடத்திவைத்திருக்கிறார்.

இரண்டு லட்சம் பேர்

இரண்டு இலட்சம் பேர்வரை டாக்டர் அம்பேத்காருடன் சேர்ந்து புத்த மதம் சார்ந்தனர். தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தைச் சேர்ந்த பல தலைவர்களும் இந்து மதத்திற்கு நன்றி கூறி இறுதி வணக்கம் செலுத்திவிட்டு புத்த மதத்திற்கு மாறினர்.

'புத்தம் சரணம் கச்சாமி' 'தர்மம் சரணம் கச்சாமி', 'சங்கம் சரணம் கச்சாமி' என்ற மூன்று புத்தமத மந்திர உச்சாடனத்துடன் மத மாற்றம் நடைபெற்றது.

உறுதிமொழி

டாக்டர் அம்பேத்காரும் அவரது மனைவியாரும் உறுதிமொழி எடுத்துக்கொண்டபின், 2 இலட்சம் பேர் மத மாற்ற உறுதிமொழி மேற்கொண்டனர்.

(1-ம் கலம் பார்க்க)

மத மாற்றம்

டெல்லி சர்க்காரின் முன்னாள் சட்ட மந்திரியான டாக்டர் அம்பேத்கார், தனது ஊழியர்கள் 2-இலட்சத்திற்கும் அதிகமானோருடன், நாகபுரியில் புத்த மதத்தைத் தழுவிக்கொண்டார்.

இந்து மதத்தோடு தங்களுக்கிருந்த நெடுநாளைய தொடர்பை அவர்கள் அனைவரும் இன்றோடு அறுத்துக்கொண்டனர்.

(5-ம் கலத்தின் தொடர்ச்சி)

"பிரம்மா, விஷ்ணு, மகேசுவரன், கௌரி, கணபதி முதலிய இந்து மதக் கடவுளர்களை இனி நான் கடவுளர்களாக மதிக்கமாட்டேன்; நான் 'பிந்த தானம்' தரமாட்டேன்; கடவுள் பிரதிஷ்டையில் எனக்கு நம்பிக்கையில்லை; எனக்கு எந்தவித 'சிரார்த்தங்'களிலும் நம்பிக்கை கிடையாது; புத்தர், விஷ்ணுவின் அவதாரம் என்ற கூற்றினை நான் நம்பவில்லை; அப்படிக் கூறுவது பொய்யானது—போக்கிரித்தனமானது;

"மந்திரம்செபிக்க நான் பார்ப்பனர்களை அழைக்கமாட்டேன்; தீண்டாமையைக் கடைப்பிடிக்க மாட்டேன்; எல்லா மனிதர்களையும் சமமானவர்கள் என்றே நான் கருதுவேன்.

"இனி நான் எனது தினசரி வாழ்க்கையில் கொலை, களவு, தீய வழியில் காமசுகம் தேடுதல், குடித்தல், பொய்யுரைத்தல் ஆகியவற்றைச் செய்யமாட்டேன் என்ற பஞ்சசீலங்களைக் கடைப்பிடிப்பேன்.

"புத்த மதம் மட்டுமே உண்மையான ஒரே மதம் என்று நம்புகிறேன்; அதுதான் அறிவு — அன்பு — கடமை ஆகிய மூன்று பெரும் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது; எனவே, இன்றுமுதல் நான், இந்து மதத்தின் எல்லாத் தொடர்புகளையும் அறுத்துக்-கொண்டு புத்த மதத்தைத் தழுவுகிறேன்"

என்ற உறுதிமொழியை மராத்திய மொழியில், மதம் மாறிய அனைவரும் மேற்கொண்டனர்.

தசரா திருவிழாவில் இரத்தவெள்ளம்

பல நூறு உயிர்கள் பலியாயின

காட்மண்டு, அக். 13—

நேபாளத்தில் நடைபெற்ற தசரா திருவிழாவில் இரத்தவெள்ளம் பெருக்கெடுத்திருக்கிறது.

காட்மண்டுவில் உள்ள கோவில்கள்—பெரியவை சிறியவை அனைத்திலும் இரத்தம் பெருக்கெடுத்திருக்கிறது.

கோவிலில் உள்ள சிலைகளுக்கு இரத்த அபிஷேகம் நடத்தப்பட்டதுடன், விழாவின்போது வீதிகள், வாகனங்கள் எல்லாம் இரத்தமயமாகவே இருந்தனவாம்.

ஆடு, கோழி, எருமை இவை போன்ற மிருகங்கள், நூற்றுக் கணக்கில் காலை முதலே தசரா திருவிழாவை ஒட்டி கோவில்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுப் பலியிடப்பட்டிருக்கின்றன!

இந்த எண்ணற்ற உயிர்கள் பலியிடப்பட்டதின் விளைவாகத்தான் கோயில்களிலும், தெருக்களிலும் இரத்த வெள்ளம் பெருக்கெடுத்ததாம்.

54 பேர் கைது

சென்னை, அக். 15—

இன்று பகல் 2 மணி வரை கிடைத்துள்ள செய்திப்படி இன்று வேலூர், மதுரை, சேலம், வாணியம்பாடி, விழுப்புரம், கோவை, திருத்தணி ஆகிய இடங்களில் இரயிலை நிறுத்தி 24 பேர்களும், தபால் நிலைய மறியலில் 30 பேரும் தமிழகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை தபால் நிலையத்தின் முன்னிலையில் மறியல்

'எல்லைக் கமிஷன்' நியமிக்கக் கோரி தமிழரசுக் கழகத்தவர் கிளர்ச்சி

இன்று எவரும் கைது செய்யப்படவில்லை

சென்னை, அக். 15—

தமிழ் நாடு—ஆந்திர எல்லைத் தகராறினைத் தீர்க்க, மத்திய அரசாங்கம 'எல்லைக் கமிஷன்' அமைக்க வேண்டுமென்று வற்புறுத்துவதற்காகத் தமிழரசுக் கழகம் இன்று மாநிலமெங்கும் அறப்போர் துவங்கியுள்ளது என்று தகவல் கிடைத்திருக்கிறது.

சென்னையில் மறியல் :

சென்னையிலுள்ள தலைமைத் தபால் நிலையத்தின் முன்பு இன்று காலை மறியல் நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தப் பொதுப் பிரச்சினையில் ஆர்வமுள்ள — தாய் மொழி உணர்ச்சிகொண்ட மாற்றுக் கட்சித் தோழர்கள் உள்பட ஏராளமான பொதுமக்கள், 'என்ன நடக்கிறது?' என்று காண, இன்று காலை 8 மணிக்கே தபால் நிலையத்தின் முன் கூடியிருந்தனர்.

நிலையத்தின் கிழக்கு நோக்கியுள்ள வாயில் முன்பாக தமிழரசுக் கழகத் தொண்டர்கள், தோழர் வானம்பாடி தலைமையில் குறித்தபடி காலை 9 மணிக்கு வந்து சேர்ந்தனர்.

கூடியிருந்த மக்கள், 'தமிழ் வாழ்க' என்று ஆரவாரித்தனர். நிலையத்தின் மற்ற இரு வழிகளிலும், தமிழரசுக் கழகத் தொண்டர்கள் அணிவகுத்து நின்றுகொண்டு 'எல்லைக் கமிஷன் நியமிக்க மறுக்கும் நேரு அரசாங்கத்துடன் ஒத்துழைக்காதீர்கள்,' என்று கோஷமிட்டவண்ணம் மறியல் செய்தனர்.

போக்குவரத்திற்கு எவ்வித இடையூறும் நேராதவாறு போலீஸ் உதவிபுரிந்து வந்தது.

தமிழரசு கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம், இதர முக்கியஸ்தர்களுடன் காரில்வந்து மறியலை மேற்பார்வையிட்டார்.

மறியல் அமைதியாக—எவருக்கும் இடையூறு இல்லாதவாறு நடைபெற்றது.

பகல் 11-30 மணிக்கு, மறியல் தொண்டர்கள், திரு. வானம்பாடி தலைமையில், 'மத்திய அரசாங்கமே, எல்லைக் கமிஷனை அனுப்பு,' 'சென்னை அரசாங்கமே, டிலலியை வற்புறுத்து,' 'தமிழ் வாழ்க' என்ற கோஷங்களை எழுப்பிவிட்டு, அமைதியாகக் கலைந்து சென்றனர்.

கூடியிருந்த பொதுமக்கள் தொண்டர்களைப் பாராட்டும் வகையில் ஆரவாரம் செய்தனர்.

ஆச்சாரியார்—காமராசர் லடாய் மீண்டும் ஆரம்பம்!

'காங்கிரசிற்குள் எதிர்க் கட்சிகூடாது'

'அந்த எண்ணம் கொண்டவர்கள் வெளியேறட்டும்'

ஆச்சாரியாருக்குக் காமராசர் பதில்

சென்னை, அக். 14—

"அடிப்படைப் பிரச்சினைகளில் மாறுபட்ட கருத்துடையவர்கள் காங்கிரசிலிருந்து வெளியேறிவிட வேண்டும்; அதுதான் முறை; அதைவிட்டு, காங்கிரசிற்குள்ளேயே ஒரு 'எதிர்க் கட்சி' அமைப்பது என்ற எண்ணத்தைக் கொள்ளக்கூடாது"

என்று முதன் மந்திரி காமராசர், ஆச்சாரியாருக்குப் பதில் தந்திருக்கிறார்.

"காங்கிரசிற்குள்ளேயே 'எதிர்க் கட்சி' என்பது காங்கிரசின் பலத்தை உடைக்கும். அடிப்படையில் மாறுபட்ட கருத்துடைய காங்கிரசார், தாராளமாகக் காங்கிரசிலிருந்து வெளியேறிக்கொள்ளலாம். மக்களிடத்தில் போய்த் தங்கள் கருத்தைக் கூறலாம்"

என்றும் காமராசர் கூறினார் எனத் தெரியவருகிறது.

சென்னை - சிந்தாதிரிப்பேட்டையில் நடைபெற்ற வட்டாரக் காங்கிரஸ் மாநாட்டில் காமராசர் கூறிய இந்தக் கருத்தினை மந்திரி பக்தவத்சலமும் ஆதரித்துப் பேசியதாகக் கூறப்படுகிறது.

★

'அழிவே தரும்'

கோவை, அக். 13—

"காங்கிரசிற்குள்ளேயே எதிர்க் கட்சி வேண்டும் என்ற-ஆச்சாரியாரின் கருத்து அழிவைத் தேடித் தரும்—தீங்கு பயக்கும்" என்று காமராசர் இங்கு கூறியிருக்கிறார்.

"ஆச்சாரியார் சுயமாகவே கருத்துக்களைக் கூறுபவர்; ஆனால், இப்போது வரவர அவர் திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் நிலைக்கு இறங்கிக் கொண்டிருக்கிறார்" என்றும் காமராசர் கூறினாராம்.

797 பேர் காயமடைந்தபின்பு ஜப்பானில் நடைபெற்ற கலவரத்திற்குக் காரணமான விமானநிலைய 'சர்வே' நிறுத்தப்பட்டுவிட்டதாம்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 15—10—'56 திங்கள்

ஆச்சாரியார் போர்க்கோலம்!

வடநாட்டவர், தென்னாட்டினை நிரந்தரமாகத் தங்களின் ஆதிக்கத்திற்கு உட்படுத்தி வைத்திருக்கவேண்டும் என்று கொண்டுள்ள ஏகாதிபத்திய நோக்கத்தின் வெளிப்படையான அம்சங்களில் ஒன்றுதான் இந்தித் திணிப்பு.

'ஏக இந்தியா' என்ற அரசியல் வாதம், 'எல்லோரும் இந்தியர்தான்—பாரதப் புத்திரர்தான்' என்ற பேச்சு, 'இந்திய ஒற்றுமை'யே பெருமைக்குரியது என்ற உபதேசம் எல்லாம் வடநாட்டுச் சரித்திரப் புரட்டர்களது ஏகாதிபத்திய உள்நோக்கத்தினை அம்பலப்படுத்துவனவற்றில் சிலவாகும்.

'ஏக இந்தியா' என்ற அரசியல் அமைப்பே திராவிடரை அடிமைப்படுத்தும் ஏகாதிபத்திய ஏற்பாடு என்று கூறி, அந்த அமைப்பிற்கு எதிராகத் திராவிட நாடு விடுதலைக்காகப் போராடிவரும் நாம், 'இந்திதான் இந்தியாவின் ஒரே தேசிய மொழி — ஆட்சி மொழி' என்று வடவர் கூறி வருவதை ஏற்க முடியாதவர்களாகிறோம்.

தங்களிடம் சிக்கிவிட்ட அரசியல் அதிகார பலத்தால் இந்தியைத் திணித்து, அதன் மூலம், இந்தியாவில்நிலவிடும் 'அரசியல் ஒற்றுமை'யை நீடிக்கச்செய்து, திராவிடரை நிரந்தர அடிமைகளாக்கிவிடலாம் என்று சதித்திட்டம் வகுத்துத்தான், இந்தித் திணிப்பு வேலைகளை வடவர் துரிதமாக — தீவிரமாக மேற்கொண்டுள்ளனர் என்றும் நாம் குற்றஞ்சாட்டி வருகிறோம்.

இயற்கையோடு இயைந்த நியாயமான தேசிய எழுச்சியின் எதிரொலியாகக் கிளம்பும் திராவிடர்களது இந்தக் குற்றச்சாட்டிற்கு அலட்சியத்தையும், எளனத்தையுமே பதிலாகத் தந்து வந்தனர், வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களது தாசர்களும்!

'இந்தித் திணிப்பு—ஏகாதிபத்தியப் போக்கு என்று குரல் எழுப்புவோர் குறுகிய நோக்கம் கொண்டவர்கள்' என்று சிலரும், 'இவர்கள் வெள்ளை ஏகாதிபத்திய எதிர்ப்பின் கூர் மழுங்காதமுனையினால் செத்துப் போய்விட்ட நீதிக் கட்சியினரின் இன்றைய வாரிசுகள்—பாதந்தாங்கிகள்' என்று சிலரும் எளனம் செய்வதின் மூலம், நியாயமான நமது குற்றச்சாட்டிற்கு நேரிய வழியில் பதில் கூறுவதினின்றும் தப்பித்துவிட முயற்சித்தனர். ஆனாலும், பரிதாபம்! அவர்கள், வெட்கம் மிகுந்த தோல்வியையே தொடர்ந்து அனுபவித்து வருகின்றனர்.

நமது குற்றச்சாட்டு நியாயமானது என்பதை உணருவோர்—ஒப்புவோர் தொகை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது.

நாம் இந்தித் திணிப்பிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்போது தான் 'பரந்த மனம்' கொண்டோரால்—'விரிந்த உள்ளம்' படைத்தோரால்—'அகண்ட நோக்கம்' உடையோரால் எளனம் செய்ய முடிந்தது—முடிகிறது.

ஆனால் ஆச்சாரியார் இந்தித் திணிப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்—'டில்லி ஆட்சியாளர்கள் தவறு செய்யாமல் தடுக்கத் தமிழர்களே, எழுவீர்!' எனப் போர்க் குரல் எழுப்பியிருக்கிறார். என்ன சொல்லப் போகின்றனர், அந்த 'அகண்ட நோக்கு'டையோர்?

ஆச்சாரியார், 'ஏக இந்தியா' என்ற அரசியல் அமைப்பில் அசைக்க முடியாத நம்பிக்கையுடையவர் என்றே இன்றும் நாம் கருதுகிறோம் - நாடு கருதுகிறது. அந்த ஆச்சாரியார், 'இந்தி மட்டும் இந்தியாவின் ஆட்சி மொழியாக்கப்படுவது அநியாயம்—அக்கிரமம்—கொடுங்கோன்மை,' என்று முழக்கமிட்டிருக்கிறார்.

ஏனைய 'ஏக இந்தியா'க்கள், அவரது இந்த இந்தி எதிர்ப்பிற்கு, 'ஏகாதிபத்திய தாசர்,' என்ற எளனத்தைப் பதிலாக்கிவிட முடியாது; 'குறுகிய நோக்கமுடையவர்,' என்று கூறிட முடியாது. என்ன பதில் கூறவிருக்கின்றனர், வடநாட்டுப் பெரிய மனிதர்களும், 'ஏக இந்திய' அரசியல்வாதிகளும்? நாடு அறிந்து கொள்ள ஆசைப்படுகிறது.

'எதிர்க்கட்சி' பற்றி ஆச்சாரியார் பேசினால், மறுநாளே விமரிசனம் செய்ய முற்படும் 'சனநாயக அணிகளின் முன்னோடிகள் தாங்கள்தான்' எனப் பீத்தித் திரியும் சில 'ஏக இந்தியா'க்கள், இந்தி பற்றிய ஆச்சாரியாரின் கருத்தையும் விமரிசிப்பார்கள் என்று நாடு எதிர்பார்க்கிறது.

ஆச்சாரியார், 'அகில இந்திய'க் கண்ணோட்டத்துடனேயே இந்தித் திணிப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்திருப்பதற்கு ஆயிரம் உள்நோக்கங்கள்கூட இருக்கலாம்; ஆனால், எதிர்ப்புக்காக அவர் கிளப்பியுள்ள வாதங்கள் ஆதாரமற்றவை என்று எவரும் துணிந்து கூறிட முடியாதே!

ஆச்சாரியார், அகில இந்திய அரசியல் அமைப்பை ஏற்றுக் கொண்டு, 'அந்த அமைப்பு செயல்படுவதற்கு இந்தி மட்டும் ஆட்சிமொழியாக்கப்படுவது கூடாது — ஆங்கிலமும் ஆட்சிமொழியாக்கப்பட வேண்டும்', என்று எடுத்துரைத்திருக்கிறார். ஆனால் இந்தி வடவரால் திணிக்கப்படுவதற்கு நாம் காட்டும் காரணம் வேறு.

"'இந்தியா' இன்றுபோல் என்றென்றைக்கும் ஒரே அமைப்பாக நீடிக்கவேண்டும்; அப்படி நீடிக்கிற காலம் வடவரின் வரலாற்றில் பொற்காலம்; ஏனெனில், அவர்களது மூதாதையரில் எவருக்கும் கிட்டாத—'தென்னாட்டவரை அடிமை கொண்டோம்; 'இந்தியா' முழுவதையும் ஒரே குடையின்கீழ் ஆண்டோம்'-என்ற பெருமை, இந்தத் தலைமுறையில்தான் வடவருக்குக் கிடைத்துள்ளது; எனவே இந்தப் 'பெருமை' நீடிப்பதற்காக, தென்னாடு நிரந்தரமாகத் தங்கள் 'குடை' நிழலில் இருக்க வேண்டுமென்பதற்காகவே இந்தியைத் திணிக்கிறார்கள்; எனவே, இந்தியை நாம எதிர்ப்பதற்கான முக்கியமான காரணம், வடவரின்பிடி தென்னாட்டில் நிலைத்துவிடக்கூடாது என்பதுதான்' என்று கூறுகிறோம்.

ஆச்சாரியார் இந்தியை எதிர்ப்பதற்கான அடிப்படையும், நாம் இந்தியை எதிர்ப்பதற்கான அடிப்படையும் மாறுபட்டதாக அமைந்திருக்கிறது என்பதும் உண்மைதான்.

'நம்முடையதிலிருந்து மாறுபட்ட ஒரு அடிப்படையிலிருந்து ஆச்சாரியார் இந்தியை எதிர்க்கிறார் என்றாலும், தமிழர்கள் தங்களின் உடனடி நலன்களைக் கணக்கிடுபவர்களானால், ஆச்சாரியாரின் அறைகூவலுக்கு செவி சாய்ப்பது மிக அவசியமானதாகும்.

'இந்திய யூனியனில் ஒட்டிக் கொண்டிருந்தால் மட்டுமே தமிழர் பெருமையடைய முடியும்', என்று பொய்கூறித் திரியும் புல்லர்கள், 'ஏக இந்திய' வாதியான ஆச்சாரியாரின் இந்தி எதிர்ப்புக்குத் தக்க சமாதானம் சொல்லட்டும்.

சென்னை பல்கலைக் கழகத்திற்கு ரூ. 1 கோடி

சென்னை பல்கலைக் கழகத்தில் பல்வேறு துறைகளை அபிவிருத்தி செய்யவும், புதிய கட்டிடங்கள் எழுப்பவுமாக பல்கலைக் கழக மானியக் குழு, ரூ 1 கோடி வரை மானியம் வழங்கச் சம்மதித்திருப்பதாகத் தெரியவருகிறது.

பல்கலைக் கழகத்தின் நூற்றாண்டு விழாவை ஒட்டி, தாங்கள் வழங்கியுள்ள மானியத்தை ரூ. 6,51,000-த்திலிருந்து ரூ 10 இலட்சமாக உயர்த்தவும் சர்க்கார் முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

சென்னை அரசாங்கமே ஏற்று நடத்துமாம்!

சென்னையுடன் சேரும் திரு-கொச்சி தமிழ்ப் பகுதிகளில் ஓடிக் கொண்டிருக்கும் பஸ் போக்குவரத்து கிறுவனத்தை சென்னை அரசாங்கமே ஏற்று நடத்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வடவரின் இந்தி வெறிக்கு எதிர்ப்பு வலுக்கிறது

'ஆங்கிலமே பொது மொழியாக நீடிக்க வேண்டும்' என்ற குரல் உரம் பெறுகிறது

'ஆங்கிலத்தைக் கைவிடுவது ஆபத்தாகும்'

மதுரையில் டாக்டர் இலட்சுமணசாமி விளக்கம்

மதுரை, அக். 11—

'இந்தியாவின் பொது மொழியாக ஆங்கிலமே தொடர்ந்து நீடிக்க வேண்டும்' என்று எழுந்துள்ள குரலுக்கு சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் இலட்சுமணசாமி அவர்கள் மேலும் உரமூட்டியிருக்கிறார்கள்.

மதுரைத் தமிழ்ச் சங்கம் தனக்குத் தந்த வரவேற்புக்குப் பதிலளிக்கையில், தொடர்ந்து டாக்டர் அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"தமிழ்மொழி வளர்ச்சியில் பல்கலைக் கழகம் மிகுந்த அக்கரை கொண்டுள்ளது. நம் மொழியை எவ்வளவுக்கு அபிவிருத்தி செய்கிறோமோ அவ்வளவுக்கு ஒரு சர்வதேச மொழியையும் நாம் கற்றுக் கொள்வது அவசியம். தென்னாட்டவரான நாம் தமிழை மட்டுமின்றி சர்வதேச மொழியான ஆங்கிலத்தையும் கற்க ஆசைப்படுகிறோம்.

"நாம் மிகுந்த பாண்டித்தியம் பெற்றுள்ள ஒரு மொழியைக் கைவிடுவது என்பது இந்தியாவிற்கு மிகுந்த ஆபத்தானது. இன்னும் பல காலத்திற்கு ஆங்கிலமே இந்தியாவின் பொது மொழியாக இருக்கவேண்டும்"

தொழிற்கல்லூரி

டாக்டர் அவர்கள் தொடர்ந்து பேசும்போது, மதுரையில் விரைவிலேயே ஒரு தொழிற்கல்லூரி நிறுவப்பட வேண்டும் என்று எடுத்துரைத்தார்.

தொழில் வர்த்தகக் கேந்திரங்களுள் ஒன்றான மதுரையில் தொழிற்கல்லூரி நிறுவப்படுவதற்கு மக்கள் உதவவேண்டும் என்றும், அந்தக் கல்லூரியில் 'எஞ்சினீயரிங்' கல்வி மட்டும் அளிக்காமல், தொழிலில் உள்ளவர்களுக்குப் பயிற்சியும் அளிக்கவேண்டும் என்றும் அவர் கூறினர்.

டாக்டர் இலட்சுமணசாமி அவர்கள் கடந்த இரு ஆண்டுகளுக்கு மேலாகவே மொழிப் பிரச்சினை குறித்துப் பேசும்போதெல்லாம், வடநாட்டு இந்தி வெறியர்களின் போக்கைக் கண்டித்தும், ஆங்கிலம் தொடர்ந்து பொதுமொழியாக நீடிக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் வந்திருப்பது அனைவரும் அறிந்ததே!

★

'அறிக்கையை வெளியிடுக'

ஆட்சி மொழிக் குழு என்ற பெயருடைய இந்தித் திணிப்புக் குழுவின் அறிக்கையை உடனடியாக வெளியிடுமாறு டாக்டர் எ.கிருஷ்ணசாமி எம்.பி., அறிக்கை ஒன்றில் வற்புறுத்தியிருக்கிறார்.

"அந்தக் குழுவிலிருந்த உறுப்பினர் ஒருவர், கன்னடம், தெலுங்கு, தமிழ்ப் பகுதிகளில் இந்திக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்றும், ஆங்கிலம் நீடிப்பதை விரும்பவில்லை என்றும் தெரிவித்திருக்கிறார். இதற்கு என்ன ஆதாரம் என்பது தெரியவில்லை. தென்னாட்டைப் பொறுத்தமட்டில் பொதுவாக இந்திக்கு எதிர்ப்பும், ஆங்கிலத்திற்கு ஆதரவும் தான் தெரிவிக்கப்பட்டிருக்கிறது; எனவே, தரப்பட்ட சாட்சிய விவரங்களோடு குழுவின் அறிக்கையை வெளியிட வேண்டும்.

"மேலும், இராசகோபாலாச்சாரியார் தெரிவித்த கருத்துக்களுக்கு எதிராகப் பாலகிருஷ்ண சர்மா என்ற எம். பி. தெரிவித்துள்ள கருத்துக்கள், இந்த அறிக்கை வெளியிடப்பட வேண்டியதின் அவசியத்தையும் அவசரத்தையும் வற்புறுத்துகின்றன; எனவே, உடனடியாக அந்த அறிக்கையை வெளியிட்டுத் தென்னாட்டவரின் அச்சத்தைப் போக்க வேண்டும்" என்று டாக்டர் எ. கிருஷ்ணசாமி அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

கோவில் பணத்திலிருந்து பால் பண்ணைகள்

தேவஸ்தானங்களுக்கு அமைச்சர் யோசனை

சென்னை, அக். 12—

கோவில் பணத்திலிருந்து பால் பண்ணைகள் நடத்துமாறு மந்திரி பக்தவத்சலம் தேவஸ்தானங்களுக்கு ஒரு யோசனை கூறியிருக்கிறாராம்.

'இப்படிப் பால் பண்ணைகள் நடத்துவது, இந்த ஸ்தாபனங்களின் நோக்கங்களுக்கு மாறுபட்டதாயிருக்காது' என்றும் அவர் விளக்கம் தந்திருக்கிறாராம்.

ரூ. 2,50,00,000 போனஸ் பெறுவர்

பம்பாயிலுள்ள 50 பஞ்சாலைகளில் பணியாற்றும் சுமார் 2,25,000 தொழிலாளருக்கு 1955-ம் ஆண்டிற்கு ரூ $2\frac{1}{2}$ கோடி போனசாக வழங்குவதென ஆலை தொழிலாளிகள் சங்கம் முடிவு செய்துள்ளனவாம்.

தமிழ் நாட்டுக் கைத்தறித் துணிகளுக்குக் கிராக்கி

தமிழ் நாட்டு 'லுங்கி' (கைலி) போன்ற சில கைத்தறித் துணிகளுக்கு அமெரிக்காவில் அதிக கிராக்கி ஏற்பட்டுவிட்டது, இத்தகைய கைத்தறித் துணிகள் அமெரிக்காவில் அதிகமாக செலவாகும் என்பது பற்றி ஏற்றுமதி முன்னேற்றக் குழுவுக்கு ஆலோசனை கூறும்பொருட்டு அமெரிக்க நிபுணர்களின் தூதுக் குழு ஒன்று இந்தியாவுக்கு வருகிறது.

சட்ட சபைத் தலைவர் கோபால மேனன் விலகுவார்

மாநிலப் புது அமைப்பையொட்டி, சென்னை சட்டசபைத் தலைவரான என் கோபால மேனன் பதவியிலிருந்து விலகிக்கொள்வார் எனத் தெரியவருகிறது.

திரு. கோபாலமேனன், மலபாரில் உள்ள பொன்னானி தொகுதியிலிருந்து சட்டசபைக்கு வந்தவர்; ஆகவே, மலபார் கேரளத்துடன் இணைவதை ஒட்டி அவரது சென்னை சட்டசபை உறுப்பினர் பதவி ரத்தாகிறது.

தொடர்ந்து, உதவித் தலைவரே சபை நடவடிக்கைகளைக் கவனிப்பார் என்றும் கூறப்படுகிறது.

சுகாதார அமைச்சரும் செல்கிறார்

தென்கன்னட மாவட்டம் மைசூருடன் இணைவதை ஒட்டி மந்திரி எ. பி. ஷெட்டியும் பதவியிலிருந்து விலகிக்கொள்கிறார்.

அவர், நவம்பர் முதல் தேதி முதல் மைசூர் சட்டசபையில் உறுப்பினராவார் என்று தெரியவருகிறது.

அவர் வகித்துவரும் மருத்துவம்—சுகாதாரம் — கூட்டுறவு—வீட்டு வசதி முதலிய இலாகாக்களை இப்போதுள்ள மந்திரிகளே பகிர்ந்து கொண்டு கவனித்துவருவர் என்றும், புதிய மந்திரி எவரும் நியமிக்கப்படமாட்டார் என்றும் தெரியவருகிறது.

குடைக் கைப்பிடியில் ஒளித்துவைத்த வைரம்

சென்னை துறைமுகத்தில் கைப்பற்றப்பட்ட விவரம்

இரங்கூனிலிருந்து 'சோனுவதி' என்ற பிரயாணிகள் கப்பல் சென்னை துறைமுகம் வந்தடைந்தது; லாசர் என்ற பெயருள்ள பிரயாணி ஒருவர் அதிலிருந்து இறங்கி சுங்கப் பரிசோதனை இடத்தையும் கடந்துவிட்டார்.

ஆனால், சந்தேகத்தின் பேரில் அவர் வைத்திருந்த இரண்டு குடைகளையும் அதிகாரிகள் சோதனையிட்டனர். குடைக் கம்பிகளிலும், கைப்பிடியிலும் 'பொந்து' போலச் செய்து, அதில் 4,000 இரங்கூன் வைரங்களை அந்த ஆசாமி ஒளித்து வைத்திருந்தார். இந்த வைரங்களின் மதிப்பு ரூ. 1,500 இருக்கக் கூடுமென நம்பப்படுகிறது.

கழகச் செய்திகள்

அறந்தாங்கி தி. மு. கழகத் துவக்க விழா

25—9—56 மாலை 6 மணி அளவில், கோவில் திடலில் தோழர் இராம. சுப்பையா தலைமையில் நடைபெற்றது தோழர் இராம. அசோகன் கழகக் கொடி யேற்றினார். தோழர் டி. கே. சீனிவாசன் சொற்பொழிவாற்றினார்.

ஆலந்துறை தி. மு. கழகத் துவக்க விழா

19—9—56 காலை 8½ மணிக்கு தோழர் வீ. வீராசாமி கொடி ஏற்றி வைத்தார். இரவு 8 மணிக்கு, தோழர் பெ. முத்து தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் சி. டி. தண்டபாணி, கோவை-செழியன் ஆகியோர் பேசினர்.

வெங்கடம்மாபேட்டை தி. மு. கழகத் துவக்கவிழா

26—9—56 காலை 8½ மணிக்கு தோழர் ரங்கசாமி தலைமையில் துவக்க விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் டி. வி. வாசு, கே. மாரியப்பன், வி. என். ஆர். சாமி, 'வண்டு' ஆகியோர் பேசினர். நிர்வாக உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வேலூர்—வேலப்பாடி தி. மு. கழகம்

7—10—56 மாலை 3 மணிக்கு, 28-வது வட்டக் கழக உறுப்பினர் கூட்டம் தோழர் மு. சீராமுலு தலைமையில் நடைபெற்றபோது, அடுத்த திங்கள் முதல் வாரத்தில் கிளைக் கழகச் சார்பில் 'அண்ணா படிப்பகம்' திறப்பதெனவும், புதிய கழக உறுப்பினர்களாகத் தோழர்கள் வே. வ. கமலக்கண்ணன், மு. சண்முகம், ஆ. தாயுமானவன், நா. ப. கிருட்டிணன் ஆகியோரை சேர்த்துக்கொண்டு தோழர் கே. வி. கே. சாமி, சேண்பாக்கம் தோழர் அர்ச்சுனன் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம்தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருத்துறைப்பூண்டி தி. மு. கழகம்

28—9—56-ல், கழக நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. செயலாளர், மாவட்டப் பிரதிநிதி: ஒ. வ டி. கே. பாலு; துணைச் செயலாளர்: சீதாராமன்; பொருளாளர்: முகமது சரீப்; மற்றும் பதினொரு பேர் செயற் குழுவினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மந்திரிபாளையத்தில் கழகப் பொதுக்கூட்டம்

14-0-56ல், தோழர் பெரியாசு தலைமையில் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் உடுமலை ப. நாராயணன், பல்லடம் பொன்னுசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். அரசாங்கத்தின் விசைத்தறித் திணிப்புத் திட்டத்தைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கிரனூர் தி. மு. கழகம்

7—10—56 இரவு 10½ மணியளவில் நடைபெற்றப் பொது உறுப்பினர் கூட்டத்தில், புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: சோமசுந்தரம்; துணைச் செயலாளர்: ந. காந்தி; பொருளாளர்: முகமது யூசுப்; மாவட்டப் பிரதிநிதி: கா. சு. சேரன்; மற்றும் செயற்குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பனைமடல் தி. மு. கழகம்

14—9—56 மாலை, கிளைக் கழக நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது. தோழர்கள் சி. குமாரசாமி, ..ர், கிருட்டிணன், ஆர். முத்துசாமி, ஒய். கே. சாமி ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மாவட்டப் பிரதிநிதியாகவும், 16 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

காரியாங்குடியில் தி. மு. கழகத் துவக்கம்

8—10—56 மாலை 6 மணிக்கு, நாகை வட்டம் காரியாங்குடியில் தோழர் இரா. விசயராகவன் தலைமையில் கழகம் துவக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்வும் நடைபெற்றது தோழர்கள் எஸ். வி. கல்யாணசுந்தரம், கு. தென்னன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பம்பாய் கம்பாலா ஹில்லில் தி. மு. க. கிளைக் கழகத் துவக்கம்

6—9—56ல் தோழர் எஸ். தியாகராசன் தலைமையில் பம்பாய் கம்பாலா ஹில் பகுதியில் கிளைக் கழகத் துவக்க விழா நடைபெற்று, நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: கை. சுப்பையா; துணைச்செயலாளர்: நா. பா. அரங்கண்ணல்; பொருளாளர்: சா. முத்தையா; மற்றும் செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர்கள் ஆரியசங்காரன், சு. தங்கவேலன், த. மு. பொற்கோ எல். என் செழியன், எ. எஸ் அன்பரசு ஆகியோர் கழகக் கொள்கைகள் குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

வீரப்பட்டி (திருச்சி)யில் தி. மு. க. அமைப்பு

3—10—56ல், வீரப்பட்டி தி. மு. கழக ஆதரவாளர்களால் அவ்வூர் 'அண்ணா இல்லத்'தில், கிளைக் கழகம் அமைக்கப்பட்டு நிர்வாக உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: ஆ. அழகப்பன்; துணைச் செயலாளர்: சு. சதாசிவம்; பொருளாளர்: ந. சடையன்; மாவட்டப் பிரதிநிதி: வீ. சா. இளஞ்செழியன் மற்றும் 7 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர் கே. வி. கே. சாமி மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

கோவில்பட்டி நகர தி. மு. கழகம்

9—10—56 காலை 9 மணிக்கு தோழர் பெ. சந்தனபாண்டியன் தலைமையில் நடைபெற்ற நகரக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் அத்தொகுதியில் பொதுத் தேர்தலுக்கு யாரை நிறுத்துவது என்பது குறித்து அடுத்தக் கூட்டத்தில் முடிவு செய்வதென்றும், விரைவில் பொதுக்கூட்டம் நடத்துவதென்றும், தோழர் கே. வி. கே. சாமி மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருக்காட்டுப்பள்ளி தி. மு. கழகம்

30-9-56 மாலை 5 மணிக்கு கிளைக்கழக உறுப்பினர் கூட்டம் தோழர் ப. கலியபெருமாள் தலைமையில் நடைபெற்றபோது கிளைக் கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: ம. இராமையன்; துணைச்செயலாளர்: க. தியாகராசன்; பொருளாளர்: ப. இராசகோபால்; மாவட்டப் பிரதிநிதி: பொன். செல்லதுரை. விளம்பரக்குழுத் தலைவர்: ஆ. இராமச்சந்திரன் மற்றும் 11 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சேலூர் (வ. ஆ.) தி. மு. க.

10—10—56 இரவு 8 மணிக்கு மேற்படி கழக மன்றத்தில் தோழர் வி. இ. செயராமன் தலைமையில் நடைபெற்றச் செயற்குழுக் கூட்டத்தில், 1-4-56 முதல் 30-9-56 வரை உள்ள கிளைக் கழக வரவு-செலவுகள், ஏலச் சீட்டு வரவு-செலவுகள், ஆறும் ஆண்டு விழாக் கூட்ட வரவு-செலவுக் கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டன.

கண்டியூரில் தி. மு. கழகத் துவக்கம்

28-9-56 காலை 10 மணிக்கு, தோழர் என். கிட்டப்பா தலைமையில் கிளைக் கழகத் துவக்கவிழா நடைபெற்றது. தோழர் பொ. தருமன் கழகக் கொடியேற்றினார் தோழர் க. அன்பழகன் கழகத்தைத் துவக்கி வைத்தார். அன்று மாலை 6 மணிக்கு குத்தாலம் நகரப் பூங்காவில் தோழர் இராமதாசன் தலைமையில் நடைபெற்றப்பொதுக் கூட்டத்தில் தோழர்கள் பொ. தருமன், என். கிட்டப்பா, க. அன்பழகன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

யாழ்ப்பாணத்தில் (இலங்கை) தி. மு. கழகம் அமைப்பு

30-9-56 மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியில் உள்ள ஸ்டான்லி கட்டிடத்தில், தோழர் சே. மு. தமிழன்பன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் கிளைக் கழகம் துவக்கப்பட்டு நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: இரா. திருமறவன்; துணைச்செயலாளர்: மதிமுகன்; பொருளாளர்: ச. கரிகாலன்; மற்றும் 10 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

முதுகுளத்தூரில் தி. மு. கழகம் அமைப்பு

30-9-56ல் தோழர் ஆர். எம். அலியார் தலைமையில் தி. மு. கழக அமைப்புக்கூட்டம் நடைபெற்று நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர் மாவட்டப் பிரதிநிதி: செ. அழகர்சாமி; துணைச்செயலாளர்: கி. முத்துசாமி பொருளாளர்: ஆர். எம் அலியார் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் 12 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர் கே. வி. கே. சாமி மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

புதிய கும்மிடிபூண்டியில் கழகப் பிரச்சார கூட்டம்

6—10—56 இரவு தோழர் முனுசாமி தலைமையில், புதிய கும்மிடிபூண்டி வட்டாரத்தில், தோழர்கள் கெ. புவியரசு, இராதாமணாளன் ஆகியோர் பிரச்சாரச் சொற்பொழிவு நடத்தினர்.

எண்ணூர் தி. மு. கழகம்

6—10—56 பகல் 12½ மணிக்கு, கழகப் பணிமனையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர், துணைச்செயலாளர் தோழர்கள் டி. என். சம்பந்தம், ஜே. எ. வகாப் ஆகியோரும் கலந்துகொண்டனர். புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: இரா. முத்துகிருட்டிணன்; துணைச்செயலாளர்: பி. வி. சங்கரன்; பொருளாளர்: பி. வி. கணேசன்; மாவட்டப் பிரதிநிதி: இ. வி. சேது. மற்றும் 11 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முக்கிய முடிவுகள் சில இறுதியில் மேற்கொள்ளப்பட்டன.

எருமப்பட்டி தி. மு. கழகம்

26—9—56-ல், கழகப் பணிமனையில் தோழர் பி. நடேசன் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராக முறையே தோழர்கள் கே. இராதாகிருட்டிணன், அப்புசாமி, ம. தர்மலிங்கம் ஆகியோரும், மாவட்டப் பிரதிநிதியாக தோழர் கே. இராதாகிருட்டிணனும் மற்றும் செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆண்டிமடம் விளந்தை தி. மு. க. துவக்கம்

துணைப் பொதுச்செயலாளருக்கு வரவேற்பு

4—10—56 மாலை, பொன்னுசாமி அரங்கில், ஆண்டிமடம் விளந்தை தி. மு. கழகத் துவக்க விழா சிறப்புற நடைபெற்றது. தோழர்கள் என். வி. நடராசன், சக்ரவர்த்தி, கோவிந்தராசன் ஆகியோர் அங்கு வந்ததும் மக்களால் வரவேற்கப்பட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் துணைத் தலைவர் திரு என். எஸ் முத்துக்குமார் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. 70 அடிக்குமேல் உயரமான கம்பத்தில் தோழர் என். வி. நடராசன் கழகக் கொடி யேற்றி வைத்தார். தோழர்கள் சு. இளநாயகம், முருகேசன், கு. தங்கவேலு ஆகியோர் பேசியபின், துணைப்பொதுச் செயலாளர் அவர்கள் வருகிற தேர்தலில் தி. மு. கழகத்தின் பங்கு குறித்தும், கழக இலட்சியம் குறித்தும் சொற்பொழிவாற்றினார்.

மாயூரத்தில் கழகப் பொதுக்கூட்டம்

7—10—56 மாலை 6 மணிக்கு, டபீர் தெருவில், தோழர் சா. மீனாட்சி சுந்தரம் தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் து. காசிநாதன், கே. எஸ். சௌந்தரராசன், என். கிட்டப்பா ஆகியோர் பேசினதும். தோழர் என். எஸ். இளங்கோ தி. மு. கழகத் தேர்தல் திட்டம், ஐந்தாண்டுத் திட்ட ஓரவஞ்சனை குறித்துப் பேசினார்.

பாப்பநாய்க்கன்பாளையம் (கோவை) தி. மு. கழகம்

26—9—56 மாலை 7 மணிக்கு, மேற்படி கழகக் கட்டிடத்தில் தோழர் சி. எஸ். ஆர். மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற நகர செயற்குழுக் கூட்டத்தில், புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: கா. சுப்பையா; துணைச்செயலாளர்: ச. செகநாதன்; பொருளாளர்: வி. துரைசாமி மற்றும் 8 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கருமலை தி. மு. கழகம்

19—9—56 இரவு 8 மணியளவில் கருமலை பிள்ளை வீதியில் தோழர் இ. ஐயாபிள்ளை தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில், கிளைக் கழகச் செயலாளர் தோழர் இரா. பிச்சமுத்து கழக சட்ட திட்டங்களை அவமதித்து நடந்து, கிளைக் கழக வேலைகளைச் சரிவரக் கவனிக்காமல் இருந்ததால், அவரை செயலாளர் பதவியிலிருந்து நீக்கி தோழர் அ. மகாலிங்கத்தை செயலாளராகத் தேர்ந்தெடுத்தும், குடும்ப அலுவல் நிமித்தம் ஓய்வு எடுத்துக் கொண்ட துணைச்செயலாளர் தோழர் இ. ஐயா பிள்ளைக்குப் பதிலாகத் தோழர் வை. முனுசாமியைத் தேர்ந்தெடுத்தும் முடிவு செய்யப்பட்டது.

26-9-56 இரவு 7 மணிக்கு கருமலைப்பிள்ளை வீதியில், தோழர் அ. மகாலிங்கம் தலைமையில் கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. முக்கியத் தீர்மானங்கள் சில மேற்கொள்ளப்பட்டன.

திருமங்கலம் தி. மு. கழகம்

3-10-56 பகல் 1 மணிக்கு திருமங்கலம் தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் தோழர் என். கிட்டப்பா தலைமையில் நடைபெற்றபோது புதிய நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்: கி. சத்தியசீலன்; துணைச் செயலாளர்: து. இராமசங்கு; பொருளாளர்: பூ. கோவிந்தராசு; மாவட்டப் பிரதிநிதி: பி. எம். அனிபா செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை—18-வது வட்ட தி. மு. கழகம்

7—10—56 காலை 10 மணிக்கு தோழர் சா. கோ. நாராயணசாமி தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், கழக 6-வது ஆண்டு விழாக் கூட்ட வரவு செலவு கணக்கு பரிசீலித்து ஒப்புக் கொள்ளப்பட்டதுடன், மற்றும் சில முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

சென்னை—34-வது வட்ட தி. மு. கழகம்

9—10—56 இரவு 8 மணிக்கு குறள் தெருக் கழகப் பணிமனையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், கழக-வரவு செலவு கணக்குகள் பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், மற்றும் பல முடிவுகள் செய்யப்பட்டன.

சென்னை—47-வது வட்ட தி. மு. கழகம்

6—10—56ல், கழகப் பணிமனையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், 20-9-56ல் நடைபெற்ற திராவிட நாடு பிரிவினை நாள் விழாக் கூட்ட வரவு-செலவுகள் ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், மற்றும் பல முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சென்னை—சூளை தி. மு. க.

16—9—56-ல், சென்னை—சூளை 17-வது வட்ட தி. மு. க. சார்பில் நடைபெறும் முத்தையா இரவுப் பள்ளியின் நிதிக்காக நடைபெற்றப் படக்காட்சியின் மொத்த வரவு ரூ. 616—12—9; மொத்தச் செலவு ரூ. 224—3—0; மீதி இருப்பு ரூ. 392—9—9.

இப்படக் காட்சி நடைபெற உழைத்த தோழர் என். வி. நடராசன் அவர்களுக்கும், 'வைரமாலை' என்ற படத்தை ஒரு காட்சிக்குக் கொடுத்து உதவிய ஜுபிடர் சோமசுந்தரம் அவர்களுக்கும் பள்ளியின் சார்பில் இதயபூர்வமான நன்றி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இதன் நினைவாக 'கம்பரு' வளர்ச்சிக்கு ரூ. 5 நன்கொடை தரப்பட்டது. வரப்பெற்றேம்—நன்றி—பொறுப்பாளர்.

நவம்பர் திங்களில் ஆண்டுவிழா விழா நடத்துவதெனவும், தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு ரூ. 101 அளிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

கிழையூரில் தி. மு. கழக அமைப்பு

3—10—56 மாலை 6 மணிக்கு, நாகை வட்டம் கிழையூரில் தோழர் இரா. விசயராகவன் தலைமையில் கழக அமைப்புக் கூட்டமும் நிர்வாகிகள் தேர்வும் நடைபெற்றது. தோழர்கள் கு. தென்னன், நாதன், எ. இராசகோபால் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

வெள்ளங்கோவிலில் கழகக் கூட்டம்

5—10—56 இரவு 7 மணிக்கு, தோழர் இரா. துரை தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில், தோழர் அன்பரசு சித்திரை கோம் பேசினபின், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், கழக இலட்சியம், மாநில மாநாட்டுத் தீர்மானங்கள், ஆட்சியாளரின் திட்டங்களில் காணப் பெறும் குறைபாடுகள் குறித்துப் பேசினார்.

ஆயக்காரன்புலம் முதல்சேத்தியில் தி. மு. கழகத் துவக்கம்

1—10—56 மாலை 6 மணியளவில், தோழர் இரா. தருமலிங்கம் தலைமையில், கிளைக் கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் வைத்திநாதன், முருகு, மோகன் ஆகியோர் பேசினர். தோழர் கே. வி. கே. சாமி மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

சங்கரலிங்கனார் மறைவு

உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த காந்தியவாதி

சென்னை, அக். 14—

'தமிழ் நாடு' என்று தாயகத்திற்குப் பெயரிட வேண்டும்; கவர்னர்கள், மந்திரிகள் ஆகியோர் நடத்தும் டாம்பீக வாழ்க்கைக்காகத் தரப்படும் கொள்ளைச் சம்பளம் நிறுத்தப்பட வேண்டும்; பொதுவாழ்விலும் அரசாங்கத்திலும் நேர்மை நிலை நிற்க வேண்டும்—என்பன போன்ற 12 கோரிக்கைகளுக்காகக் கடந்த ஜூலைத் திங்கள் 27-ம் நாள் முதல் 77 நாட்களாக உண்ணாவிரதமிருந்துவந்த விருதுநகரைச் சேர்ந்த காந்தியவாதியும் தியாகியுமான அ. பெ. சங்கரலிங்க (நாடார்) அவர்கள் தமது 62-வது வயதில், 13-ந்தேதியன்று, மதுரை மருத்துவமனையில் காலமானார் என்ற சோகச் செய்தியை அறிவிக்க மிக வருந்துகிறோம்.

கடந்த வாரத்தில் விருதுநகரில் இருந்து மதுரை மருத்துவமனைக்கு இவரைப் போலீசார், தூக்கிவந்து, பலாத்காரமாக குளுகோஸ் கொடுத்ததாகவும், சிறுநீர் வரவில்லை என்பதற்காக 'ஆபரேஷன்' செய்ததாகவும், பின்னர் 13-ந்தேதி மாலை இறந்துபட்டதாகவும் தெரிய வருகிறது.

மரணச்செய்தி கேட்டதும் மாணவர்களும், ஏராளமான பொது மக்களும் மருத்துவமனை முன் கூடி தங்களின் இறுதிவணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர்.

பின்னர், சங்கரலிங்கனாரின் பிரேதம், மருத்துவ மனையிலிருந்து மயானக்கரைக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது என்றும், பல கட்சித் தோழர்களும் மதுரை நகரசபைத் தலைவரும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர் என்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

சென்னையில் :

சென்னையில், சங்கரலிங்கனாரின் மரணச் செய்தி 13-ந் தேதி மாலை கிடைத்ததும் ஆங்காங்கே பல கட்சித் தோழர்களும் நகர மக்களுக்கு இச்செய்தியை அறிவித்தனர்.

மாலையில் நேப்பியர் பார்க்கிலிருந்து பெத்துநாய்க்கன்பேட்டை வரையில் தமிழரசுக் கழகத்தவர் ஒரு மௌன ஊர்வலம் நடத்தினர்; ஏராளமான தோழர்கள் கலந்துகொண்டனர்.

மாணவர்கள் பட்டினி கிடந்தனர்

செய்தியறிந்த பச்சையப்பன் கல்லூரி விடுதி மாணவர்கள் 500 போ வரையில் 13-ந் தேதி இரவு உணவு உண்ணாமல் பட்டினி கிடந்தும், ஒரு மணி நேரத்திற்கு மேலாக மௌனமாயிருந்தும் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டனர்.

மாலையில் பெத்துநாய்க்கன்பேட்டையில் நடைபெற்ற தமிழரசுக் கழகப் பொதுக் கூட்டத்தில் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த தியாகி சங்கரலிங்கனாருக்கு அனுதாபம் தெரிவித்தும், அவரது கோரிக்கைகளை விளக்கியும் ம. பொ. சி. பேசினார்.

சர்வ கட்சிக் கூட்டம்

சென்னையில் வரும் 21-10-56 ஞாயிறன்று சங்கரலிங்கனார் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்க ஒரு சர்வ கட்சிக் கூட்டம் நடத்துவதுபற்றி கம்யூனிஸ்டுக் கட்சியினர் ஏற்பாடுகள் செய்து வருவதாகவும் தெரியவருகிறது.

தஞ்சை மாவட்டத்தில்

திராவிட முன்னேற்றக்கழகத் தேர்தல் ஆய்வுக் குழு

"தஞ்சை மாவட்டத்தில் கீழ்க் கண்டபடி தேர்தல் ஆய்வுக்குழுக் கூட்டம் நடைபெறும் :—

"அறந்தாங்கி, அதிராம்பட்டினம், பட்டுக்கோட்டை, மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி (2) ஆகிய தொகுதிகளுக்கு 22—10—56 காலை 9-மணியளவில் பட்டுக்கோட்டை காசாங்குளம் வடகரைச்சத்திரம் ஓய்வு விடுதியிலும்,

"தஞ்சாவூர், கந்தர்வக் கோட்டை, திருவையாறு, பாபநாசம் (2), கும்பகோணம் ஆகிய தொகுதிகளுக்கு 22—10—56 மாலை 3 மணியளவில் தஞ்சாவூர் கொண்டிராசபாளையம் பொன்னுப்பூண்டார் சத்திரம் தண்ணீர்ப் பந்தலிலும்,

"மாயூரம், சீர்காழி (2), ஆடுதுறை, நன்னிலம், திருவாரூர் (2), நாகப்பட்டினம் ஆகிய தொகுதிகளுக்கு 22-10-56 மாலை 6 மணி அளவில், மாயூரம் சந்திப்பு பக்கம் முனிசிபல் ஓய்வு விடுதியிலும் நடைபெறும்.

"கிளைக் கழகச் செயலாளர்களும், மாவட்டப் பிரதிநிதிகளும், கழகப் பொது உறுப்பினர்களும் தவறாது வருகை தந்து, தேர்தல் ஈடுபாடு குறித்த ஆய்வுரைகள் வழங்கிச் சிறப்பிக்க வேண்டுகிறேன்,'

—என்று தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் என். எஸ். இளங்கோ அறிவிக்கிறார்.

சொற்போர் அரங்கு

16—10—56 மாலை 6 மணிக்கு, சென்னை—எஸ்பிளனேட் ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றத்தில், தோழியர் ஜி. பி. அமுதா தலைமையில் தோழர் க. வேழவேந்தன், 'சாதிப் பிரிவினை நம் நாட்டுக்கு இனியும் தேவையா?' என்ற தலைப்பில் விவாதத்தை ஆரம்பித்துவைப்பார்.

திருப்பாச்சேத்தி பாண்டியனார் மன்ற ஆண்டு விழா

17—10—56 மாலை திருப்பாச்சேத்தியில் மேற்படி மன்ற ஆண்டு விழா நடைபெறும். தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் என். எஸ். இளங்கோ, மற்றும் பலர் பேசுவர்.

'ஆத்திரப்பட்டு தோல்விடையாதீர்'

இந்தித் திணிப்புக் குறித்து வடநாட்டுப் பாதிரியார்

சேலம், அக் 13—

பூனா சமூகக் கழகத்தின் தலைவரான பூஜ்யர் ஜெரோம் டி சௌஜா என்பார் நேற்று இங்கு நடைபெற்ற கூட்டம் ஒன்றில், இந்தியாவின் ஒற்றுமைக்காக வாதாடிவிட்டு, 'இந்தியை அவசரப்பட்டுத் திணிப்பதால் இந்தியாவின் ஒற்றுமை பாதிக்கப்படும்' என்று கூறியிருக்கிறார்.

"இந்தியை இந்திய அரசாங்க மொழியாக்குவதில் அவசரப்படுவது, தோல்வியையே கொண்டு வந்து சேர்க்கும். இந்தக் காரியத்திற்குத் தேவையானால் 50 ஆண்டுக் காலம்கூடப் பொறுத்திருக்கலாம். தங்களுக்கு 'அன்னியமல்லாத' மொழியான ஆங்கிலத்தால் பெறக்கூடிய பலன்களையும் இந்தியர்கள் இழந்துவிடக்கூடாது" என்று அவர் கூறினாராம்.

அரசாங்க ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம்

மைசூர் முதலமைச்சர் தகவல்

பெங்களூர், அக். 14—

மாதம் ரூ 300-க்கு மேற்படாமல் சம்பளம் வாங்கும் அரசாங்க ஊழியர்களுக்கு, மாதம் ரூ. 5 முதல் ரூ. 20 வரை இடைக்கால நிவாரணம் அளிக்கப்படும் என்று மைசூர் முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

இதனால் அரசாங்கத்தில் மாதம் ரூ. 6,50,000 அதிகச் செலவாகுமென்று தெரிகிறது.

பதவியேற்பவர்கள் முடிவு செய்வார்களாம்!

பெங்களூர், அக். 14—

புதிய மாநிலங்கள் அமைந்த பின்னரும் அடுத்துவரும் ஆண்டுகளில் வழக்கம்போல மைசூரில் 'தசரா' நடைபெறும் என்றும், அதை எப்படி நடத்துவது என்பதைப் பதவியேற்கும் அரசாங்கம் முடிவு செய்யும் என்றும் மைசூர் முதலமைச்சர் மஞ்சப்பா வெளியிட்டார்.

புதிய கேரளத்திற்கு

126 சட்டசபைத் தொகுதிகள்

எர்ணாகுளம், அக். 14—

நவம்பர்முதல் புதிதாக உருவாக்கப்படவிருக்கும் கேரள மாநில சட்டசபை 126 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும் என்றும், இந்தியப் பாராளுமன்றத்தில் 18 இடங்கள் இருக்குமென்றும் தெரிய வருகிறது.

ரூ. 3 இலட்சம் மதிப்புள்ள நெல் பயிர்கள் நாசம்

ஆலப்புழை, அக். 14—

ஆலப்புழை கடற்கரையோரமாக உள்ள குட்ட நாடு பகுதியில் உள்ள 5,000 ஏக்கர் நிலத்தில், கடந்த சில நாட்களாகப் பெய்த மழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தில் நெல் பயிர்கள் மூழ்கி நாசமாகிவிட்டனவாம்.

பயிர்களுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் ரூ. 3 இலட்சத்திற்கு மேல் இருக்குமெனக் கூறப்படுகிறது

'பண்டு'க்கு ஏற்றவார்த்தை!

புதுடில்லி, அக். 15—

"இந்தியாவில் பற்பல மொழிகளிடையே போட்டி ஏற்படுவதென்பது முட்டாள்தனம் என்பது மட்டுமல்ல—அது சம்பந்தப்பட்ட மொழிகளுக்கே தீங்கு விளைவிப்பதாகும்"

என்று, பண்டித நேரு, செய்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

சிங்களத்தில் பட்டப் படிப்பு

கூடாதென கொழும்பு பல்கலைக் கழகம் முடிவு

கொழும்பு, அக். 12—

'இடைநிலை மற்றும் பட்டப் படிப்பிற்கு சிங்களத்தையே உபயோகிக்கவேண்டும்,' என்ற ஒரு தீர்மானத்தை, கொழும்பு பல்கலைக் கழகப் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் நிராகரித்திருக்கின்றனர்.

தீர்மானத்திற்கு ஆதரவாக 18 வாக்குகளும், எதிராக 21 வாக்குகளும் கிடைத்தன என்று தெரிய வருகிறது.

தோட்டக்காரர்களுக்குப் பயிற்சியளிக்கத் திட்டம்

மாநில பழ உற்பத்தி அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றி வைப்பதற்காக, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஆண்டுதோறும் 1500-லிருந்து 2000 தோட்டக்காரர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும்.

இத்தகைய தோட்டக்காரர்களைப் பயில்விக்க விரும்பும் மாநில சர்க்கார்களுக்கு இந்திய சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு திட்டத்தின்கீழ் 50 சதவிகிதம் உதவித் தொகை கொடுக்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்கு ரூ. 10,050-ம் குடகு மாநிலத்துக்கு ரூ.3,000-ம் ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கிறது.

மற்ற மாநிலங்களிலிருந்து வந்துள்ள திட்டங்கள் இந்திய சர்க்காரின் பரிசீலனையிலிருந்து வருகின்றன.

நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவதென முடிவு

மதுரை, அக். 14—

நவம்பர் 15-ந் தேதிக்குள் தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை சர்க்கார் நிறைவேற்றி வைக்காவிட்டால் அரசாங்கத்தை எதிர்த்து நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவது என்று திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற தமிழ் நாடு காங்கிரஸ் அரசியல் தியாகிகள் மாநாடு முடிவு செய்துள்ளதாம்.

'ஏக இந்தியா' மனப்பான்மை அதுதான்!

புதுடில்லி, அக். 14—

பண்டித நேருவும், இராசேந்திர பிரசாத்தும் இங்கு நடைபெற்ற இராம லீலா விழாவில் ஆரம்ப முதல் கடைசிவரை அமர்ந்திருந்து இராவணன், கும்பகர்ணன் ஆகியோரின் உருவங்கள் கொளுத்தப்படுவது கண்டு மகிழ்ந்தார்களாம்!

6 மாத 'போனஸ்' தருமாறு தீர்ப்பு

பம்பாய், அக். 15—

1954—55-ம் ஆண்டிற்கு, பஞ்சப்படி நீங்கலாக மற்ற 'படி'கள் உட்பட 8 மாத அடிப்படைச் சம்பளத்தை மேட்டூர் 'இண்டஸ்டிரீஸ்' தொழிலாளர்களுக்குப் போனசாகத் தரவேண்டுமென்று கோவை தொழில் கோர்ட் அளித்த தீர்ப்பை மாற்றி; 6 மாத அடிப்படைச் சம்பளமே போனசாகத் தரப்பட வேண்டுமென்று பம்பாய் தொழிலாளர் அப்பீல் மன்றத் தீர்ப்புக் கூறியுள்ளது.

'எட்டு மாத போனஸ் கொடுத்தால், தொழில் துறையில் பெரும் அமைதியின்மை ஏற்படும்' என்ற கம்பெனியின் வாதத்தை அப்பீல் மன்றம் ஏற்றுக்கொண்டது.

விடுதலை பெறுமென்ற நம்பிக்கையிருக்கிறதாம்!

தேசிய சுதந்திரத்திற்காகப் போராடும் ஆப்பிரிக்க நாடுகள் கூடிய விரைவில் விடுதலை பெறுமென்று எனக்கு நம்பிக்கை உண்டாகியிருக்கிறது என்று பண்டித நேரு, ஆப்பிரிக்க மாணவர்கள் சங்கத்தில் பேசுகையில் கூறியுள்ளார்.

*****-*******-**

தேர்தல் ஆய்வுக் குழுச் சுற்றுப்பயணம்

☆

அக்.	ஊர்	நேரம்	தங்கும் இடங்கள்
16 :	திருச்சி	.... மாலை 6 ,,	.... முனிசிபல் சத்திரம்
17 :	திண்டுக்கல்	.... காலை 9 ,,	
,,	பெரியகுளம்	.... மாலை 6 ,,	.... இராமையா இல்லம்
18 :	மதுரை	.... காலை 9 ,,	
,,	விருதுநகர்	.... மாலை 6 ,,	.... முசாபரி பங்களா
19 :	திருநெல்வேலி	.... காலை 9 ,,	.... பாளையங்கோட்டை, திருச்செந்தூர் ரோடு முருகன் ஐஸ் பாக்டரி மாடி (கிரைம் பிராஞ்சு போலீஸ் ஸ்டேஷன் அருகில்)
,,	நாகர்கோவில்	.... மாலை 6 ,,	.... நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக அலுவலகம்
20 :	திருவனந்தபுரம்	.... காலை 9 ,,	.... ; தி.மு.க., ஆண்டாள் பில்டிங்ஸ், தம்பானூர்
21 :	காரைக்குடி	.... மாலை 6 ,,	.... 'இயூமன் காட்டேஜ்'—Human Cottage 5. முத்துப்பட்டிணம் 4-வது தெரு
22 :	பட்டுக்கோட்டை	.... காலை 9 ,,	.... காசாங்குளம் வடகரை சத்திரம் ஓய்வுவிடுதி
,,	தஞ்சை	பிற்பகல் 3 ,,	.... கீழவாசல். கொண்டிராசபாளையத் தண்ணீர்ப் பந்தல் கட்டிடம்
,,	மாயவரம்	.... மாலை 6 ,,	.... முனிசிபல் ஓய்வு விடுதி (மாயூரம் சந்திப்பு அருகில்)
23 :	கடலூர் N. T.	.... காலை 9 ,,	.... முசாபரி பங்களா

23—10—56 அன்று இரவு சென்னை வந்து சேருவார்கள்

'அறிவகம்' சென்னை 23—9—56

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

****************************-**************************

கைத்தறித் துணிக்கு அரையணா தனி தள்ளுபடி

அக். 20-ந்தேதியிலிருந்து நவ. 2-ந்தேதி வரையிலும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், சர்க்கார் சேமிப்பு வாங்கி உபயோகிப்போர் சங்கம் ஆகியவைகளின் மூலம் விற்கப்படும் துணிக்கு ரூபாய்க்கு அரையணா வீதம் 'தனித் தள்ளுபடி' அளிப்பதற்கு மத்திய சர்க்கார் முடிவு செய்துள்ளதாம்; ஏற்கனவேயுள்ள தள்ளுபடியும் வழக்கம்போல் அளிக்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, நூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.